விடும் என்று நினைக்கிறேன். எல்லாக் கட்சிகளிலும் உள்ளவர்கள் கேள்வி கேட்க அனுமதிக்கப்பட்டு இருக்கிறார்கள்; எல்லா விவரங்களும் வந்துவிட்டன. உங்களுக்குக் குறைகள் இருந்தால் அறையில் வந்து சொல்லவும்.

திரு. ரா. உமாநாத்: இது முக்கியமான விஷயம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எது முக்கியமான விஷயம் இல்லை?

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, நடைமுறையைப் பொறுத்த வரையில், எந்தக் கட்சியாக இருந்தாலும் மூலக் கேள்வி கொடுத்தவருக்கு இரண்டு சப்ளிமெண்டரி கேட்பதற்கு உரிமை உண்டு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக் கேள்வி கொடுத்தவர் தான் முதல் துணைக் கேள்வி கேட்டிருக்கிறார். மூலக்கேள்வி கேட்டவருக்கு இரண்டு துணை வினாக்கள் கேட்பதற்கு வாய்ப்பளிக்க வேண்டும் என்கிற நடைமுறையை அடுத்த கேள்வியில் இருந்து பின்பற்றலாம்.

காடம்பாறை நீரேற்று மின் திட்டப்பணியாளர்.

*வினா எண். 3 திரு. கு. ரமணி: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கோவை மாவட்டம் பொள்ளாச்சி தாலுக்கா காடம் பாறை நீரேற்று மின் திட்டப்பணிகளை காண்டிராக்ட் எடுத்துள்ள H.C.C. கம்பெனி நிர்வாகத்திற்கும் சுரங்கப்பாதை வேலையில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கும் இடையே தொழில் தகராறு ஏற்பட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், திட்டப்பணி பாதிக்காமலிருக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:

(அ) மற்றும் (ஆ): ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கும் ஒப்பந்தக் கம்பெனிக்கும் இடையே எழுந்துள்ள தொழிற் தகராறு குறித்து தொழிலாளர் துணை ஆணையாளர் சம்பந்தப் பட்ட தொழிற் சங்கத்தோடு பேச்சு வார்த்தை நடத்தி வருகிறார்.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, இந்தக் காடம்பாறை நீரேற்று மின் நிலையத் திட்டம் மிகவும் முக்கியமான திட்டம். அது தாமதப்படாமல் சீக்கிரமாக நிறைவேறும் பொருட்டு—

ஒப்பந்தத் தொழிலாளர்களாக இருந்தாலும், அந்த மெயின் கான்ட்ராக்டர்கள் தான் அந்தத் தொழிலாளர்களுக்கு முதலாளி என்று இருந்தாலும் அந்த தொழிலாளிகளுக்கு 8 மணி நேரம் வேலை என்பது உள்பட எந்த சட்டபூர்வமான உரிமையையும் அந்த முதலாளிகள் அனுமதிக்காமல் இருந்த காரணத்தால் தான் இந்த வேலை நிறுத்தம் ஏற்பட்டது. மேலும் அதில் தாமதம் எற்படுவதைத் தடுக்க அரசு தீவிரமாக இதில் தலையிட்டு' தொழிலாளிகளின் உரிமையைப் பாதுகாக்க முன் வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, சட்டத்தையும் பார்க்கவேண்டும். அதே நேரத்தில், இந்தத் திட்டத்தையும் பார்க்க வேண்டும். இந்தத் திட்டம் 3 ஆண்டு காலத்தில் முடித்தாக வேண்டும் என்று நாமும் கடுமையான வேகத்தில் செயல்பட்டு வரவேண்டும் என்று வற்புறுத்தி வருகிறோம். அங்கே இருக்கும் தொழிலாளர்களைப் பொறுத்த வரையில், அவர்கள் சில கோரிக்கைகளை ஒப்பந்தக்காரர்களிடத்தில் கொடுத்து, அதை வற்புறுத்தி போராட்டம் போன்றவைகளில் ஈடுபட்டு வருகிறார்கள். விரைவில் சுமுக நிலை ஏற்படுவதற்கு அரசு ஆவன செய்யும்.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லியுள்ள இந்தப் பதிலை நான் வரவேற்கிறேன். ஆனால் அந்த ஒப்பந்தக்காரர்களின் கையில் சிக்கியுள்ள தொழிலாளர்களுக்கு ஒப்பந்தக்காரர்கள் தான் முதலாளி, அவர்கள் எப்படியாவது செய்து கொள்ளட்டும், அரசுக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை என்ற நிலை, அல்லது பேச்சு அரசுப் பக்கத்தில் இருந்து வரக்கூடாது என்று சொல்லிக்கொள்கிறேன். ஆகவே, அந்தத் தொழிலாளிக்கு முதலில் பாதுகாப்பு கொடுப்பதற்கு வேண்டிய துரித நடவடிக்கைகளை அரசு எடுத்து இருந்தால் இந் நேரம் அந்தப் பிரச்னை தீர்ந்து போய் இருக்கும். ஆகவே, இப்போதாவது அந்த லேபர் இலாகாவோடு, சம்பந்தப்பட்ட அமைச்சரோடு நமது அமைச்சர் கலந்து பேசி, அவர்களுக்கு இதில்ல பிரதான பொறுப்பு உண்டு என்ற முறையில் அதைத் தீர்ப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே. லேபர் கமிஷனர் அவர்கள் இம்மாதம் 17-ந் தேதி இதுகுறித்து பேச்சு வார்த்தை நடத்துவதாக இருக்கிறார்கள். அதில் சுமுகமான முடிவு ஏற்படும் என்று நம்புவோம்.